

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.2.2025) சென்னை, கிண்டியில் நடைபெற்ற, பங்கஜ் குமார் பன்சல், திருமதி.ஜி. லதா, இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்கள் ஜே. எல். சுஜரிதா கௌதம் கே.ராம் ஆகியோருக்கு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, வாழ்த்தினார். உடன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.2.2025) சென்னை, ஈஞ்சம்பாக்கத்தில் நடைபெற்ற, எஸ். சதீஷ்குமாரின் மகள் எஸ். கமலி – ஆர். சிவக்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.2.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அய்யாளம்மன் படித்துறை பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ரூ.18.63 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள திருச்சி பறவைகள் பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்ய நாதன், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ரூ.18.63 கோடி மதிப்பீட்டில் திருச்சியில் பறவைகள் பூங்கா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

திருச்சி, பிப்.11-

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.2.2025) திருச்சிராப் பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கம்பரசம்பேட்டை ஊராட்சி, அய்யாளம்மன் படித்துறை பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ரூ.18.63 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள திருச்சி பறவைகள் பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார்.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் தமிழ்நாட்டின் மைய பகுதியில், அனைத்து மாவட்டங்களுக்கும் எளிதில் செல்லும் வகையில் போக்குவரத்து வசதியுடன் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் முக்கொம்பு சுற்றுலாத் தலம் மிகவும் புகழ்பெற்றதாகும். அகன்ற ஆறாக இருக்கும் காவிரி ஆறு திருச்சிராப்பள்ளி மாவட்டம் முக்கொம்பில் காவிரி, கொள்ளிடம் என்று இரண்டு ஆறுகளாக இயற்கையிலேயே பிரிந்து பல நூற்றாண்டு களாக புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக திகழ்ந்து வருகின்றது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 18.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கம்பரசம்பேட்டை ஊராட்சி, அய்யாளம்மன் படித்துறை பகுதியில் 4.02 ஏக்கர் பரப்பளவில் திருச்சி பறவைகள் பூங்கா அமைக்கும் பணிகள் கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கி, தற்போது பணிகள் முடிவடைந்துள்ளன. திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளது மிகச் சிறப்பானதாகும்.

திருச்சி பறவைகள் பூங்காவில் 60,000 சதுர அடி பரப்பளவில் ஐந்திணை என்றழைக்கப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் ஆகிய 5 வகை நில அமைப்புகளை விவரிக்கும் வகையில் அந்த நிலப்பகுதிகளுக்கான அடையாளங்கள் அமைக்கப்பட்டு, அங்கு பல்வேறு வண்ணங்களால் மனதை கொள்ளை கொள்ளும் வகையிலான நூற்றுக்கணக்கான பறவைகள் விடப்பட்டுள்ளன. இந்த பகுதிக்குச் செல்லும் பார்வையாளர்களின் மீது பறவைகள் அமர்ந்து அவர்களிடம் கெஞ்சும் அழகு காண இயலாததாகும். மேலும் இங்கு பார்வையாளர்கள் பறவைகளுக்கான பிரத்யேக உணவினை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பறவைகள் தங்குவதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட குடில்கள் மற்றும் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

### பல்வேறு பறவைகள்!

மேலும், சுருள் ரெக்கை (FRILL BACK), பொமேரியன் பௌட்டர் (Pomeranian Pouter), கேடய பௌட்டர் (SHIELD POUTER), கிளி மூக்கு (SCANDAROON, வைர புறா (DIAMOND DOVE), நீண்ட முகம் டம்ளர் (Long Face Tumbler), கட்ட வால் (MALTESE), ஓரியண்டல் பிரில் (ORIENTAL FRILL), பூ ரெக்கை (Spanish Chorrera), மூஞ்சி மூடி (JACOBIN), போண்டா புறா (Modena), சின்ன மூஞ்சி (Short face), அழகு ஹோமர் (Beauty homer ), கழுத்தசைப்பான் ( Neck Shaker), கேரியர் புறா (Carrier pigeon), மாக்பை பௌட்டர் (MAGPIE Pouter), அரசன் (KING), செம்பு புறா (ARACHANGEL), ஆகிய புறா வகைகள் தனித்தனியே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு வகையான அழகிய கோழியினங்கள், நெருப்புக்கோழிகள், ஈமுக்கள் தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பல வகை வாத்துகள், பலவகை கிளிவகைகள், பலவகை குருவிகள் தனித்தனியே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பல வகையான முயல்கள் தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. திருச்சி பறவை பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள கோய் மீன் குளம் (KOI FISH POND) குழந்தைகளை வெகுவாக கவரும்.

இந்தியாவிலேயே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள திருச்சி பறவைகள் பூங்கா மிகப்பெரிய பறவைக் கூடம் என்பது ஒரு முக்கிய சிறப்பம்சமாகும். மேலும் இங்கு பறவைகளின் இனப்பெருக்கத்திற்கென தனிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

திருச்சி பறவை பூங்காவில் கூடுதலாக 7 டி மினி திரையரங்கில் பார்வையாளர்களுக்கு திரையிடப்படும் படங்கள் முப்பரிமாண காட்சிகளாக அருகில் தெரிவதுடன், காட்சிகளின் அமைப்பிற்கு ஏற்ப தங்களைச் சுற்றி ஈரமாக உணர்வது, தங்கள் உடலை காற்று தழுவுவது, அதிர்வுகளை உணர்தல் உள்ளிட்ட சிறப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இத்திரையரங்கில் ஒரே நேரத்தில் பொதுமக்கள் 50 பேர் அமர்ந்து பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை ஆர்வலர்கள், செல்லப்பிராணி ஆர்வலர்கள், பொதுமக்கள், சிறுவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களையும் கவரும் வகையில் இந்த பறவைகள் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்காவினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2025) திறந்து வைத்தார். இந்த திருச்சி பறவைகள் பூங்கா தமிழ்நாட்டின் அனைத்து பகுதி சுற்றுலா பயணிகளுக்கும் ஒரு வரப் பிரசாதமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், திருச்சிராப் பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ர.ராஜலெட்சுமி, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி கங்காதாரணி உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உரையாற்றினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சூர்யாவெற்றிகொண்டான், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா ப.விஜயரங்கன், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய அரசின் துரோகங்களால்

# தமிழ்நாட்டு மக்கள் கடும் கோபத்தில் இருக்கின்றனர்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, பிப்.11-

“ஒன்றிய அரசின் துரோகங்களால் தமிழ்நாட்டு மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர்” என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கின்ற ஒன்றிய அரசு, பட்ஜெட்டிலும் தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய துரோகத்தை செய்து இருக்கிறது. இதை பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்ல, மும்முனைப் போராட்டம் தி.மு.க. நடத்தியது.

யு.ஜி.சி. வரைவு அறிக்கையில் மாநில அரசுகளின் உரிமையை பறிக்கும் வகையில் ஒன்றிய அரசு திருத்தங்களை செய்துள்ளது. இதனை தி.மு.க. தலைவர் அவர்கள் வன்மையாக கண்டித்து கடிதம் எழுதியதோடு நிற்காமல், தமிழ்நாடு மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், கடந்த, பிப்ரவரி 6-ஆம் தேதி, தலைநகர் டில்லியில் தி.மு.க. மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டத்தை நடத்த உத்தரவிட்டார்.

### அனைத்துத் தரப்பிலும் கண்டனக் குரல்!

பா.ஜ.க. அல்லாத மாநிலங்கள் ஆளுகின்ற அனைத்து மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அந்த ஆர்ப்பாட்டம் அமைந்தது. காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் பங்கேற்றார். அகிலேஷ் யாதவ் உட்பட இந்தியா கூட்டணியில் இருக்கும் தலைவர்கள் அனைவரும் பங்கேற்ற நிலையில், அந்த ஆர்ப்பாட்டம் வெற்றியாக அமைந்தது. மாநில அதிகாரங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஒன்றிய அரசு பறிப்பதை எதிர்த்து கண்டன குரலை அனைத்து தரப்பிலும் எழுப்பத் துவங்கி உள்ளனர்.

மீனவர்களுக்கு இலங்கை அரசால் கொடுக்கப்படுகின்ற துன்பங்களை களைவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு பலமுறை கடிதம் எழுதியும், நிரந்தர தீர்வு கிடைக்காத காரணத்தினால், இந்தியா கூட்டணியில் உள்ள தமிழ்நாடு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற வளாகத்தின் வெளிப்புறத்தில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

மூன்றாம் கட்டமாக, நேற்றயை தினம் தமிழ்நாட்டில் இருக்கின்ற 72 கழக மாவட்டங்களிலும் ஒன்றிய அரசு எந்தளவுக்கு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்பதை வெளிப்படுத்தும் வகையில் திமுக சார்பில் கண்டன பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது. இந்த கூட்டங்களும் மிகப் பெரிய வெற்றி பெற்றுள்ளது.

### கழகத் தலைவர் தெளிவாகக் கூறினார்!

தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை வெளிப்படும் வகையில் அந்த பொதுக்கூட்டங்கள் எடுத்துக்காட்டாக அமைந்தன. ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு இழைக்கும் ஓரவஞ்சனையை, திமுக தலைவர் அவர்கள் ஆவடியில் மிகத் தெளிவாக பேசி இருக்கிறார்.

மாதவரத்தில் நடந்த கூட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எதிரான தனது கோபத்தை வெளிப்படுத்தும் வகையில் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் பேசி இருக்கிறார்.

எந்த வகையில் தமிழ்நாடு தாழ்ந்து விட்டது. எல்லா வகையிலும் ஒன்றிய அரசுக்கு பொருள் ஈட்டும் தரும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. வரிப் பகிர்வில் கூட 6 லட்சத்து 28 ஆயிரம் கோடி ரூபாய் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு சார்பில் வழங்குகிறோம். அதில் 56 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே திருப்பித் தருகிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம்?

### தமிழ்நாட்டிற்கு ஏன் ஓரவஞ்சனை?

உத்தரப்பிரதேசம், பீகார், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு மட்டும் அதிக நிதியை ஒதுக்குகின்றனர். ஏன் தமிழ்நாட்டிற்கு மட்டும் இந்த ஓரவஞ்சனை?

ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் நடிக்கிறார். தானும் ஒரு தமிழச்சி எனும் சொல்லும் அவர் தமிழ்நாட்டிற்கு செய்தது என்ன? கொடுக்கும் பணத்தை கூட திருப்பித் தருவதற்கு யோக்கியதை இல்லை.

புயல் வெள்ளத்தில் தமிழ்நாடு பாதிப்பு அனைவருக்கும் தெரியும். சேர வேண்டிய நிதி, ஆசிரியர்கள் சம்பளம், 100 நாட்கள் வேலை திட்டத்திற்கான நிதி என எதையும் தர மறுக்கிறார். தமிழ்நாட்டை பழி வாங்க வேண்டும் அதற்கு காரணம், தமிழ்நாட்டில் புரட்சிகரமான திட்டங்களை உலகம் போற்றும் அளவில் செயல்படுத்தப்படுவது தான்.



காலை உணவு திட்டத்தை கனடாவில் இருப்பவர்கள் கட பாராட்டுகின்றனர். தமிழ்நாட்டின் பெருமை உச்சத்துக்கு சென்றுள்ள நிலையில், தாங்கிக் கொள்ள முடியாமல் மோடி அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.

### எடப்பாடி நடிக்கிறார்!

எடப்பாடி பழனிசாமி நடிக்கிறார். அவரது ஆட்சிக் காலத்தில், மாநில அரசின் அதிகாரத்தை ஆட்சி செய்ய வேண்டிய பணிகளை ஆளுநரே ஆய்வு செய்தார். அப்போது எதிர்கட்சியான திமுக ஆளுநர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது. எங்கள் மீது வழக்கு போடப்பட்டது. மாநில உரிமை விசயத்தில் ஆட்சியில் இருந்தாலும், இல்லா விட்டாலும் தி.மு.க. விட்டுக் கொடுக்காதது என்பதற்கு இதுபோல பல உதாரணம் உள்ளன. ஆனால் எடப்பாடி பழனிசாமி ஒன்றிய அரசுக்கு எதிராக பெயரளவில் ஒரு அறிக்கை மட்டுமே வெளியிட்டு இருக்கி றார்.

நிதி நெருக்கடியான நிலையிலும், இந்தியாவில் தமிழ்நாட்டில் 13 திட்டங்களில், நாட்டிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழும் வகையில் செயல்படுகிறோம். 41 சதவீதம் பெண்கள் வேலைக்கு செல்கின்றனர். கல்வியில் வளர்ச்சி அடைந்து இருக்கிறோம். இதனை தமிழ்நாடு மக்களும் உணர்ந்து இருக்கிறார்கள். இதனை திசை திருப்பும் வகையில், திருப்பரங்குன்றம் விவகாரத்தை கையில் எடுத்தனர். அதுவும் சரி செய்யப்பட்டுவிட்டது. மதம், இனத்தின் பெயரால் பிரச்சினையை ஏற்படுத்துவதன் பாஜக வேலை.

தமிழ்நாட்டிற்கு வந்தே பாரத், தேஜஸ் ரயில்களை விட்டதாக நிர்மலா சீதாராமன் சொல்கிறார். அதுவும் ரயில்களுக்கு பெயர் இந்தியில், ஆனால் மறைந்த கலைஞர் அவர்கள் ஆட்சியில் போது, தமிழ்நாட்டிற்கு வந்த ரயில்கள் அனைத்தும் தமிழ் பெயர்களை தாங்கி ஓடின.

நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்பிக்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் நிர்மலா சீதாராமன் கோபப்படுகிறார். இதற்கு மேலும் ஒன்றிய அரசு திருந்தா விட்டால் தி.மு.க. உரிய வகையில் பாடம் புகட்டும்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார்.

பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்து அவர் பேசினார்.

**கேள்வி:** ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் திமுக வெற்றி குறித்து எடப்பாடி பழனிசாமி விமர்சித்து இருக்கிறாரே?

**பதில்:** ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத் தேர்தலில் திமுக இமாலய வெற்றி பெற்றுள்ளது. தேர்தல் ஆணையத்தின் மூலம் இந்த தேர்தல் அமைதியாகவும் நியாயமாக நடைபெற்றது. திருப்பரங்குன்றம் விவகாரம், அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தை முன் வைத்து எதிர்கட்சியினர் பேசினர். அண்ணாமலை சவுக்கால் தன்னை அடித்துக் கொண்டார். இருப்பினும், 90 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று உள்ளோம். இது தான் திமுக தலைவர் அவர்களுக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கிற்கான எடுத்துக்காட்டு.

**கேள்வி:** ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயல் சில மாநிலங்கள் தாங்கள் செலுத்திய வரிக்கு ஏற்ப நிதி கேட்பது அற்ப சிந்தனை என சொல்லி இருக்கிறாரா?

**பதில்:** அவருக்கு தான் அற்ப சிந்தனை. எங்களிடம் இருந்து சுரண்டிக்கொண்டு செல்லும் நிலையில், நாங்கள் வாய் முடி சும்மா இருக்க வேண்டுமா? நாங்கள் செலுத்தும் வரியில், 50 சதவீதமாவது கொடுக்க வேண்டுடமா? மக்கள் எங்களை கேள்வி கேட்க மாட்டார்களா?

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி அவர்கள் பேட்டியளித்தார்.

## பள்ளிக்கல்வி நிதியை வழங்க மறுப்பு!

# ஒன்றிய பாசிச அரசை மாணவர்கள் - ஆசிரியர்கள் மன்னிக்க மாட்டார்கள்!

## பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கடும் கண்டனம்!

சென்னை, பிப்.11-

“ஒருங்கிணைந்த் பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய ரூ.2152 கோடியை குஜராத் மற்றும் உத்திரபிர தேச மாநிலங்களுக்கு அனுப்பி ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டை வஞ்சித்துள்ளது” என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் அறிக்கை வருமாறு :-

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.2152 கோடியை குஜராத், உத்திரபிரதேசம் போன்ற பிற மாநிலங்களுக்கு அளித்துள்ளது தமிழர் விரோத ஒன்றிய அரசு.

தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியான PMShri திட்டத்தில் நாம் இணைய வேண்டும் என ஒன்றிய அரசு கட்டாயப்படுத்துகிறது. அத்திட்டத்தில் இணைந்தால் தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கை அமல்படுத்த நேரிடும் என்பதால் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி உறுதியுடன் நாம் மறுத்து வருவதால் நமக்கு தரவேண்டிய நிதியை அவர்கள் ஆளும் மாநிலங்களுக்கு ஒதுக்கி உள்ளது பாசிச பாஜக அரசு.

வஞ்சக மனப்பான்மையோடு செயல்படும் ஒன்றிய பாசிச அரசை மாணவர்களும், ஆசிரியர்களும் மன்னிக்க மாட்டார்கள்.

மாநில உரிமையைப் பெறும் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடுவோம். கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவோம். கல்வி விடுதலை ஒன்றே நமது மாநிலத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு தீர்வு தரும்!

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.